**சுருக்கம்**

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், 1978 – நெடுஞ்சாலைத் துறை பொருள் பட்டியலிலுள்ள சில பொருள்களை பொதுப்பணித் துறை மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் கொண்டு வந்து ஆணை வெளியிடப்பட்டது – தமிழ்நாடு அரசு அலுவல் விதிகளின் முதலாம் அட்டவணைக்குத் திருத்தங்கள் – வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (ஏ) துறை

அரசு ஆணை (நிலை) எண். 145

நாள்:11.08.2008
ஆடி 27, திருவள்ளுவராண்டு 2039
படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.195, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள்:09.10.2001.

2. அரசு ஆணை (நிலை) எண்.67, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள்: 12.03.2007.

------

**ஆணை:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 166-ன் உட்கூறு (2) மற்றும் (3) –ல் அளிக்கப் பெற்ற அதிகாரங்களின்படி, தமிழ்நாடு ஆளுநர், இதன் மூலம், கீழ்க்கண்டவாறு திருத்தங்களைத் தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், 1978-க்கு அமைக்கின்றார்.

**திருத்தங்கள்**

மேலே கூறப்பட்ட விதிகளின் "முதலாம் அட்டவணையில்",

(1) (அ) "நெடுஞ்சாலைத் துறை"என்னும் தலைப்பில் "மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் இடம் பெறும் பொருட்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ், கீழே குறிக்கப்பட்டுள்ள பதிவுகள் நீக்கப்படுகின்றன:-

"நாடாளுமன்றத்தினால் சட்டம் மூலம் தேசிய நீர்வழிகள் என அறிவிக்கப்பட்ட நீர்வழிகள் தவிர்த்த உள்நாட்டு நீர்வழிகளில் இயந்திர ஆற்றலினால் செலுத்தப்படும் அல்லது மனித ஆற்றலினால் செலுத்தப்படும் அனைத்து வகையான படகுகள் அல்லது

கலங்கள் ஆகியவற்றிற்கான தோணித் துறைகள், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் அதன் மீதான போக்குவரத்து, தனிப்பணி ஆடைகள் மற்றும் உடைகள்.

"பக்கிங்காம் கால்வாய் இயக்குதல் மற்றும் பராமரிப்பு".

(ஆ) "பொதுப் பட்டியலில் இடம் பெறும் பொருள்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ்,

(i) "உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து " என்ற பதிவு நீக்கப்படுகிறது.

(ii) "கப்பல் போக்குவரத்து, இயந்திரத்தால் இயக்கப்படும் கலங்கள் தொடர்பாக உள்நாட்டு நீர்வழிகளில் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் அத்தகைய நீர்நிலைகள் மீதான சாலைகள் குறித்த விதிகள். நாடாளுமன்றத்தால் சட்டத்தின் மூலம் தேசிய நீர்வழிகளாக அறிவிக்கப்பட்ட நீர்வழிகள் நீங்கலாக, உள்நாட்டு நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லும் வண்டிகள்" என்ற பதிவுகள் நீக்கப்படுகின்றன.

(2) "பொதுப்பணித்துறை" என்னும் தலைப்பின் கீழ், "மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்குரிய பொருட்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ், "பக்கிங்காம் கால்வாய் தவிர்த்த கால்வாய்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல்" என்ற பொருளுக்கு கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்யப்படுகிறது:-

பக்கிங்காம் கால்வாய் இயக்குதல் மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட கால்வாய்கள்".

(3) (அ) "போக்குவரத்துத் துறை" என்னும் தலைப்பின் கீழ், "மாநில அரசின் அதிகாரப்பட்டியலுக்குரிய பொருட்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ் "மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வருகின்ற பேருந்துப் போக்குவரத்து தவிர நாட்டுடைமையாக்கல்" என்ற பொருளுக்கு கீழ், கீழ்கண்ட பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

"நாடாளுமன்றத்தினால் சட்டம் மூலம் தேசிய நீர்வழிகள் என அறிவிக்கப்பட்ட நீர்வழிகள் தவிர்த்த உள்நாட்டு நீர்வழிகளில் இயந்திர ஆற்றலினால் செலுத்தப்படும் (அல்லது) மனித ஆற்றலினால் செலுத்தப்படும் அனைத்து வகையான படகுகள் (அல்லது), கலங்கள் ஆகியவற்றிற்கான தோணித் துறைகள், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் அதன் மீதான போக்குவரத்து, தனிப்பணி ஆடைகள் மற்றும் உடைகள்.

(ஆ) "பொதுப் பட்டியலில் இடம் பெறும் பொருள்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ் வரும் பொருளுக்குப் பதிலாக கீழ்வரும் பொருள்கள் மாற்றீடு செய்யப்படுகின்றன:-

"உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

ரயில் போக்குவரத்து என்பதில் நிலம் கையகப்படுத்தல் ஆனால் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் தொடர்பானவை இதில் அடங்காது.

கப்பல் போக்குவரத்து, இயந்திரத்தால் இயக்கப்படும் கலங்கள் தொடர்பாக உள்நாட்டு நீர்வழிகளில் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் அத்தகைய நீர்நிலைகள் மீதானசாலைகள் குறித்த விதிகள். நாடாளுமன்றத்தால் சட்டத்தின் மூலம் தேசிய நீர்வழிகளாக அறிவிக்கப்பட்ட நீர்வழிகள் நீங்கலாக, உள்நாட்டு நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லும் வண்டிகள்'.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி
தலைமைச் செயலாளர்

பெறுநர்

செயலாளர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-9.
செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை–9.
செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.
அனைத்து செயலாளர்கள், தலைமைச் செயலகம் சென்னை-9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.

நகல்:

ஆளுநரின் செயலாளர், சென்னை-22.
முதலமைச்சரின் செயலாளர்கள், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
சிறப்பு ஆணையர் மற்றும் செயலரின் தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
செயலரின் தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, (பயிற்சி) சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து பிரிவுகள் / அலுவலர்கள், சென்னை-9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//